உத்தமர் காந்தியடிகளின் நினைவு நாளான தியாகிகள் நாளையொட்டி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.1.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியின்போது, உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், துறைச் செயலாளர்கள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி அவர்களுக்கு நினைவரங்கம்!

பல தலைமுறைகளையும் கடந்து உங்கள் புகழ் பாடும்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு - ஏ.கோவிந்தசாமியின் புதல்வர் ஏ.ஜி.அன்பழகன் நெகிழ்ச்சிக் கடிதம்!

சென்னை, பிப். 1- "முன்னாள் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களுக்கு தாங்கள் நினைவரங்கம் அமைத் திருப்பது பல தலைமுறைகளை யும் கடந்து உங்கள் புகழ் பாடிக் கொண்டிருக்கும் என்பதில் ஐய மில்லை" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஏ.கோவிந்தசாமி அவர்களின் இரண்டாவது மகன் ஏ.ஜி.அன்ப ழகன் நெகிழ்ச்சிக் கடிதம் எழுதி யுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்க ளுக்கு அவர் எழுதிய கடி தம் வருமாறு:-

என் தந்தை ஏ. கோவிந் தசாமி அவர்கள் மறை வுக்கு பின்னால் எங்களது குடும்பம் செய்வதறியா மல் தத்தளித்து நின்றது. அந்த நேரத்தில் முத்தமிழறிஞர் கழக தலை வர் கலைஞர் அவர்கள் தாயுள்ளத்தோடு எங்கள் குடும்பத்திற்க்கு நல நிதி யாக ரூபாய் 1லட்சம் 1969ல் நிதிஅளித்து, சகோ தரிகளுக்கு திருமணம் செய்து வைத்து எங்கள் தாயாரை அரசியலிலும் தொடர வைத்து மறு வாழ்வு அளித்ததை பய னாளிகளில் ஒருவனாக நன்றி உணர்வோடு குறிப் பிடுகிறேன்.

முத்தமிழறிஞர் தலை வர் கலைஞர் அவர்கள் எங்கள் தந்தையின் மீது வைத்திருந்த அளப்பரிய அன்பாலும், தந்தையின் அயராத உழைப்பிற்காக வும் ஒரு தலைவராகவும், தாயுள்ளத்தோடும் செய் தார்கள்.

இது அகில இந்தியா வில் மட்டுமல்ல; அகில உலக வரலாற்றிலேயே எந் தக் கட்சித் தலைவரும் செய்யாத செயற்கரிய செயல் என்று கூறினால் அது மிகையாகாது.

அண்ணா, நீங்கள் என் தந்தை ஏ.ஜி அவர்களுக்கு நினைவரங்கம் அமைக்கப டும் என அறிவித்து அதை மிக அருமையாக வடிவ மைத்து ஒரு சரித்திர நினை வரங்கத்தை உருவாக்கி ஏ.ஜி அவர்கள் 1952 ல் இருந்து அவர் மறைந்த

1969 வரை அவர் ஆற்றிய மக்கள் பணி, பொது பணி யில் அவர் ஆற்றிய அய ராத உழைப்பையும் தற் போது உள்ள தலைமுறை மட்டுமல்லாமல் வருங் கால தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வகை யிலும் என் தந்தையாரின் புகழ் என்றும் நிலைத்து நிற்கும் வகையிலும் ஒரு சரித்திர சான்றாகவும் அமைத்துள்ளீர்கள்.

இது தங்களுடைய அறி வாற்றலையும், தொலை நோக்குப் பார்வையையும் காட்டுகிறது. முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களால் "கொள்கை குணக்குன்றம்" என பாராட்டப்பட்ட ஒரு எளிய தலைவருக்கு இந்த நினைவரங்கம் பல தலைமுறைகளையும் தாண்டி உங்கள் புகழ் பாடிக்கொண்டிருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

அண்ணா, நான் 1972 முதல் 1976 வரை மாண வர் தி.மு.க சென்னை மாவட்ட இணை அமைப் பாளராக பணியாற்றியுள் ளேன். கழக பணியில் சிறை சென்றுள்ளேன். எனக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்து கழகம், முத்த மிழறிஞர் கலைஞர், அவர் களின் பின்னால் உங்கள் தலைமையிலும், வழியி லும் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல மைச்சர் தலைமையிலும் வழியிலும் நின்று பணி யாற்றுவேன், என் குடும்ப மும் பணியாற்றும் என்ப தனை என் தந்தை திரு ஏ. கோவிந்தசாமி மீது ஆணையிட்டு உறுதி அளிக்கிறேன்.

இவ்வாறு ஏ.ஜி.அன்பழ கன் தமது கடிதத்தில் கூறி யுள்ளார்.

பேரறிஞர் அண்ணா 56வது ஆண்டு நினைவு நாள்!

அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை!

மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

திருப்பூர், பிப். 1-

திருப்பூர் வடக்கு மாவட் டக் கழகத்தினருக்கு மாவட் டச் செயலாளரும், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பி னருமான க.செல்வராஜ் விடுத்துள்ள அறிக்கை வரு மாறு:

தமிழினம் கண்ட தனிப் பெருந் தலைவர், தாய் நாட் டுக்கு "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டிய தகைமையா ளர், இனம், மொழி காக்கும் அறப்போரில் இணையிலா வெற்றி பெற்ற இன்ப சூரி யன், காஞ்சித் தலைவன், தென்னாட்டு காந்தி, இந் நாட்டு இங்கர்சால் எனப்பு கழும் பெருமைகளும் பல கொண்ட அறிஞர்கற்க்கெல் லாம் அறிஞர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளினை யொட்டி திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலா ளர், திருப்பூர் தெற்கு சட்ட மன்ற உறுப்பினர் க.செல்வ ராஜ் ஆகிய எனது

தலைமையில் மாநகர கழக செயலாளர்கள் டிகேடி மு.நாகராசன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகி யோர் முன்னிலையில் 03.02.2025 திங்கட்கிழமை அன்று காலை 08.00 மணிய ளவில் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் முதன் முதலில் சந்தித்த இட மான திருப்பூர் ரயில் நிலை யம் முன்பு அமைந்துள்ள தந்தை பெரியார், பேறிஞர் அண்ணா அவர்களின் திருவு ருவச்சிலைக்கு மாலை அணி வித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடை பெற உள்ளது. இந்நிகழ்ச்சி யில் மாவட்ட கழக நிர்வாகி கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்ட கழக, வார்டு கழக, கிளை கழக செயலாளர்கள், இன்னாள், முன்னாள் நிர்வாகிகள், சட் டமன்ற முன்னாள் உறுப்பி னர்கள், மாமன்ற இன்னாள், முன்னாள் உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்பு களான இளைஞர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, வர்த்தகர் அணி, மருத்துவ அணி, நெச வாளர் அணி, பொறியாளர் அணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக் கிய அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, சிறுபான்மை யினர் நல உரிமைப்பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, விளை யாட்டு மேம்பாட்டு அணி உள்ளிட்ட அணிகளை சார்ந்த அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னணி யினர் அனை வரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் அன் புடன் கேட்டுக் கொள்கி றேன்.

மேலும் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகதிற்குட் பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்ட கழக, கிளை கழக நிர் வாகிகள் அனைவரும் தி.மு. கழகத்தின் சார்பாக அமை திப் பேரணிகள் நடத்தியும், பேரறிஞர் அண்ணா அவர்க ளின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரி யாதை செலுத்தியும், திருவு ருவச்சிலை இல்லாத இடங் களில் திருவுருவப் படத்திற் கும் மாலை அணிவித்தும், மலர் தூவியும் அஞ்சலி செலுத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இவ் வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., பெரம்பலூர் மாவட்டம், எளம்பலூர் சமத்துவபுரத்தில் வசித்து வரும், தலைமைக் கழக பேச்சாளர் மூ.விஜயரத்தினம் துணைவியார் வி.வசந்தி என்பவர் மறைவையொட்டி அவரது இல்லம் சென்று திருஉருவப்படத்தை திறந்து வைத்து குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலை மைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தமுதாழை பாஸ்கர், ஒன்றிய கழகச் செயலாளர் எம்.ராஜ்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன் (எ) ஹரிபாஸ்கர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து உள்ளனர்.

பேரறிஞர் அண்ணா 56-வது நினைவு நாள்!

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

பிப்-3 அன்று அமைதிப் பேரணி!

மாவட்டக் கழகத் தோழர்களுக்கு சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!

காஞ்சி தந்த காவியத் தலைவர் - உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் - தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட் டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ் நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் - கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - "இப்படை தோற்கின் எப்படை வெல் லும்" என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் - "மெட்ராஸ் ஸ்டேட்" என்ற பெயரை "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் - சுயமரியாதைச் சுடரொளி - சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் - எழுத்து வேந் தர் - தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலை வர் - **பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளினையொட்டி, முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் கழக முன்னணியினர் பிப்ரவரி - 3, திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு காமராசர் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்து வார்கள்.**

இந்த அமைதிப் பேரணி வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகிலிருந்து புறப்பட்டு அண்ணா சதுக்கத்தை சென்றடையும்.

கழக இந்நாள் - முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் - முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப் பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நல உரி மைப் பிரிவு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் அண்ணா அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

நாள் : 31.01.2025 **சென்னை மாவட்ட தி.மு.க.**

கோவை மாநகர் மாவட்டத்தில்

பேரறிஞர் அண்ணா நினைவு நாள் அமைதிப் பேரணி!

மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு!

கோவை, பிப்.1-

கோவை மாநகர் மாவட் டச் செயலாளர் நா.கார்த் திக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சி தந்த காவியத் தலைவர், உலகத்தமிழர் உள்ளங்களில் எல்லாம் நீக் கமற நிறைந்திருக்கும் செந் தமிழ் காவலர், தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட் டுக்காகவும், தமிழ்நாட் டின் சிறப்புக்காக வும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர், கடமை, கண்ணியம், கட் டுப்பாடு எனும் தாரக மந் திரத்தை அரசியல் உலகத் திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர்

"இப்படை தோற்கின் எப்படை வெல்லும்"

என்று நெஞ்சுயர்த்தி பெரு மிதம் கொண்ட பெரும கன் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்.

தான் மறைந்தாலும் தனது புகழ் எப்போதும் நிலைத்திருக்குமாறு செய்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 56 ஆவது நினைவு நாளான 03.02.2025, திங்கட்கிழமை அன்று, காலை 8.00 மணிய ளவில், தமிழ்நாடு மின்சா ரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், மாவட்ட பொறுப்பு அமைச்சர் வி. செந்தில்பாலாஜி வழிகாட் டுதலில்,

கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில், கோவை சித்தாபுதூர் வி. கே.கே.மேனன் சாலையில் இருந்து அமைதி ஊர்வலம் புறப்பட்டுச் சென்று, கோவை காந்திபுரத்தில் உள்ள, பேரறிஞர் அண் ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணி வித்து, மரியாதை செலுத் தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. அதுசமயம், இந்நி கழ்வில், கோவை மாநகர் மாவட்ட திமுக நிர்வாகிகள், கோவை நாடாளுமன்ற உறுப்பி னர்,தலைமைக் கழக நிர் வாகிகள், மேயர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் கள்,பகுதிச் செயலாளர் கள், வட்டக்கழகச் செய லாளர்கள், அனைத்து உள் ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பா ளர்கள், துணை தலைவர் கள், துணை அமைப்பாளர் கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக்கழக நிர்வாகிகள், கழக செயல்வீ ரர்கள், BLA 2 பாக முகவர் கள், கழகத் தொண்டர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், மருதுறை ஊராட்சி, மருதுறை பிரிவில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் சார்பில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா, வேளாண்மை இணை இயக்குநர் சுந்தரவடிவேல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழக மண்டல மேலாளர் ரகுநாதன், வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சி.கருணை பிரகாஷ் உள்பட பலர் உள்ளனர்.